செ.வெ.எண்.116/2018 நாள்: 16.03.2018

**காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தமிழகமெங்கும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு 16.03.2018 முதல் 20.04.2018 வரை நடைபெறுகிறது. தேர்வு காலை 10.00 மணிக்கு தொடங்கி நண்பகல் 12.45 மணி வரை நடைபெறுகிறது. காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு காஞ்சிபுரம் மாவட்டத்தில் 157 தேர்வு மையங்களில் நடைபெறுகிறது. இத்தேர்வில் 610 பள்ளிகளின் மாணவ-மாணவிகள் பங்கு பெறுகின்றனர். ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் ஒரு துறை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர். 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வை 25 ஆயிரத்து 466 மாணவர்களும், 27 ஆயிரத்து 339 மாணவிகளும் ஆக மொத்தம் 52 ஆயிரத்து 805 பள்ளி மாணவ-மாணவிகள் தேர்வு எழுதுகின்றனர். தனித்தேர்வர்களாக 1699 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்.

தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் வழங்குவதற்காக 19 வினாத்தாள் கட்டுக்காப்பு மைங்கள் அமைக்கப்பட்டுள்ளது. வினாத்தாள்களை 27 வழித்தட அலுவலர்கள் மூலம் 157 தேர்வு மையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு எழுத பொதுமான விடைத்தாள்கள் பெற்று முகப்பு தாட்கள் தைக்கப்பட்டு அந்தந்த மையத்தில் பாதுகாப்பாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தேர்வு நாட்களில் தேர்வு மையங்களுக்கு வினாத்தாட்களை பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்ல ஆயுதம் தாங்கிய காவலர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் வருவாய் மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு கல்வி மாவட்டத்தில் 203 மாற்றுத்திறனாளி மாணவ-மாணவிகளும், காஞ்சிபுரம் கல்வி மாவட்டத்தில் 94 மாற்றுத்திறனாளி மாணவ-மாணவிகளும் ஆக மொத்தம் 297 மாற்றுத்திறனாளி மாணவ-மாணவிகளுக்கான பல்வேறு சலுகைகளுடன் தேர்வு எழுதுகின்றனர். மேலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சொல்வதை எழுத 195 ஆசிரியர்களை (Scribe) சொல்வதை எழுதுபவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலா் திருமதி.திருவளர்செல்வி உடன் இருந்தார்.

**செய்தி வெளியீடு,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**